S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE ஞாயிறு நவம்பர் 30 * 2025 * மலர் -1 * இதழ்-182* VOL-1 * ISSUE-182 விலை ரூ.3 * பக்கம் -4

# தி.மு.க. எம்.பி.க்களுடன் ஸ்டாலின் ஆலோசனை!

## வாக்காளர் திருத்தம், மெட்ரோ ரெயில் குறித்து குரல் எழுப்ப அறிவுரை!!

**சென்னை, நவ.30**

பாராளுமன்ற குளிர் கால கூட்டத்தொடர் நாளை மறுநாள் தொடங்குகிறது. இதை முன்னிட்டு தி.மு.க. எம்.பி.க்களுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார். அப்போது தமிழக நலன்கள் தொடர்பாக குரல் எழுப்ப வேண்டும் என அறிவுரை வழங்கினார். அந்த வகையில் வாக்காளர் பட்டியல் திருத்தம், மெட்ரோ ரெயில் குறித்து அறிவுரை வழங்கியுள்ளார்.

பாராளுமன்ற குளிர் கால கூட்டத்தொடர் நாளை மறுநாள் (டிசம்பர் 1–ஆம் தேதி) கூடுகிறது. இந்தக் கூட்டம் டிசம்பர் 19–ஆம் தேதி வரை மிகக் குறைந்த நாட்களே நடக்கிறது. அதன் பிறகு ஜனவரியில் பட்ஜெட் கூட்டம் தொடங்கிவிடும். அதனால் தான் குளிர்கால கூட்டத்தொடரை குறைந்த நாட்கள் மட்டுமே நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத் தொடரில் பல முக்கிய பிரச்சினைகளை எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன. தற்போது 12 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் நடைபெற்று வருகிறது.

இதை எதிர்க்கட்சிகள் குறை கூறி வருகின்றன. அது மட்டுமல்லாது இந்தப் பணியால் ஊழியர்கள் கடுமையான அழுத்தத்திற்குஆளாவதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது. மேற்கு வங்கத்தில் மட்டும் 40 பேர் தற்கொலை செய்துள்ளதாக கூறப்படுகிறது. ஆகவே இந்த விவகாரத்தை எதிர்க்கட்சிகள் கையில் எடுக்க உள்ளன. இது ஒருபுறம் இருக்க இந்தக் கூட்டத்தொடரில் சுமார் 10 மசோதாக்களைநிறைவேற்ற மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அதில் அணுசக்தி துறையில் தனியாருக்கு பங்களிப்பது குறித்தும் அனுமதி வழங்கப்படுகிறது.

**தி.மு.க. ஆலோசனை**

இந்த நிலையில், தி.மு.க தலைவரும், தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமையில், தி.மு.க எம்.பி.க்கள் கூட்டம், சென்னை, அண்ணா அறிவாலயம், 'முரசொலி மாறன் வளாகத்தில்' உள்ள கூட்ட அரங்கில் இன்று நடைபெற்றது.

நாடாளுமன்றத்தில் கோவை, மதுரை மெட்ரோ திட்டம் நிராகரிப்பு, எஸ்.ஐ.ஆர் உள்ளிட்ட விவகாரங்களை எழுப்புவது குறித்து தி.மு.க. எம்.பி.க்கள் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த கூட்டத்தில், தி.மு.க பொதுச்செயலாளர் துரைமுருகன், எம்.பி.க்கள் டி.ஆர்.பாலு, திருச்சி சிவா, கனிமொழி கருணாநிதி, ஆ.ராசா, பி.வில்சன், தமிழச்சி தங்கபாண்டியன் உள்ளிட்ட எம்.பி.க்கள் மற்றும் மூத்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.







## 70 முதல் 90 கி.மீ. வேகத்தில் பலத்த சூறைக்காற்று வீசும்!

**சென்னை, நவ.30**

டித்வா புயல் நாளை தமிழக கரைக்கு மிகவும் நெருக்கமாக வரும். குறைந்தபட்சம் 25 கி.மீ. தொலைவு, அதிகபட்சம் 60 கி.மீ. தொலைவும் இருக்கும். இதன் காரணமாக கடலோர மாவட்டங்களில் பலத்த சூறைக்காற்றுடன் மழை பெய்யும். சென்னையில் 70 கி.மீ. முதல் 80 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என கூறப்படுகிறது. கடலூர் பகுதியில் 90 கி.மீ. வேகத்திலும் காற்று வீசலாம் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அத்துடன் பலத்த மழையும் பெய்யும். ஒரு வேளை இந்தப் புயல் வலுவிழக்கும் வாய்ப்பும் உள்ளது.



தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு மேட்டூர் அரசு மருத்துவமனைகளில் பிறந்த 4 குழந்தைகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் டி. எம். செல்வகணபதி தங்க மோதிரம் அணிவித்தார். இதில் மாவட்ட துணை செயலாளர் சம்பத்குமார், நகர செயலாளர் காசி விஸ்வநாதன், நங்கவள்ளி ஒன்றிய பொறுப்பாளர் அர்த்தநாரீஸ்வரன் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் அருண்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடுங்குளிர் நிலவி வரும் நிலையில், கிருஷ்ணகிரி – பெங்களூர் சாலை டான்சி அருகே கம்பளி, சொட்டர், மப்ளர், குல்லா விற்பனை ஜோராக நடக்கிறது.



குமரி மாவட்டம் ஆரல்வாய்மொழி பகுதிகளில் வைக்கப்பட்டுள்ள காற்றாலை தற்போது காற்று, மழை பெய்து வருவதால் மின்சாரம் கூடுதலாக கிடைத்துள்ளது.

### சேலத்தில் நள்ளிரவில் பரபரப்பு:

## 2 வீடுகள் மீது பெட்ரோல் குண்டு வீச்சு; மர்ம நபர்களுக்கு வலை!!

**சேலம் நவ 30**

சேலம் மாவட்டம் அழகாபுரம் பெரிய புதூர் பிடாரியம்மன் தெரு பகுதியைச் சேர்ந்தவர் வள்ளி. இவர் பெங்களூருவில் வியாபாரம் செய்து வருகிறார். இவருக்கு பாபு மற்றும் கார்த்திக் என்ற 2 மகன்கள் உள்ளனர். பாபு கொத்து வேலை செய்து வருகிறார். கார்த்திக் கல்லூரியில் படித்து வருகிறார்.

இந்த நிலையில் நேற்று நள்ளிரவு சுமார் 1:30 மணி அளவில் அவர்களுடைய வீட்டின் மீது மர்மநபர்கள் பெட்ரோல் குண்டு வீசி விட்டு தப்பி சென்றனர். ஆனால் அது குறி தவறி வீட்டின் முன்பு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு சக்கர வாகனத்தின் மீது தவறி விழுந்தது. இதில் அந்த இரு சக்கர வாகனம் முழுவதுமாக தீப்பிடித்து எரிந்து கருகி சேதம் அடைந்தது.

இதே போல் அதே பகுதியில் ஆடியோ மற்றும் ஜெனரேட்டர் வேலை செய்து வரும் சிவராஜ் என்பவரது வீட்டிலும் நேற்று நள்ளிரவு பெட்ரோல் குண்டு வீசப்பட்டது. இதில் அவரது வீட்டின் முன்பக்க கதவு எரிந்து நாசமாகியது. பெட்ரோல் குண்டு வெடித்த சத்தம் கேட்டு அப்பகுதியினர் வீட்டை விட்டு வெளியே வருவதற்கு முன்பாகவே மர்ம நபர்கள் அங்கிருந்து தப்பி ஓடி விட்டனர்.

நள்ளிரவில் அடுத்தடுத்து நடந்த இந்த சம்பவங்களால் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.இது குறித்து தகவல் அறிந்து அழகாபுரம் காவல் துறையினர் விரைந்து வந்தனர்.எரிந்து கொண்டிருந்த இருசக்கர வாகனத்தின் மீது நீரை ஊற்றி தீயை அணைத்தனர். நள்ளிரவில் 2 வீடுகளின் மீது பெட்ரோல் குண்டு வீசிய சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை செய்தனர். பெட்ரோல் குண்டு வீச்சில் சம்பந்தப்பட்ட மர்ம நபர்களை போலீசார் வலை வீசி தேடி வருகின்றனர்.

### சிறுமிக்கு பாலியல் தொல்லை:

## கறிக்கடை ஊழியருக்கு 30 ஆண்டு சிறை!

**சிவகங்கை, நவ.30**



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்த மூர்த்தி மகன் கார்த்திக் (24) இவர் இங்குள்ள ரயில்வே கேட் அருகே கறிக்கடை ஒன்றில் வேலை செய்து வந்துள்ளார் கடந்த 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அருகில் உள்ள கிராமத்தைச் சேர்ந்த 17 வயது சிறுமிக்கு பாலியல் ரீதியாக தொந்தரவு கொடுத்துள்ளார்.

இச்சிறுமி தனது பெற்றோரிடம் இது குறித்து தெரிவித்த நிலையில் அவர்களது புகாரியின் அடிப்படையில் மானாமதுரை சிப்காட் போலீசார் வழக்கு பதிவு செய்து கார்த்திகை கைது செய்தனர் இவ்வழக்கு சிவகங்கை போக்சோ நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இவ்வழக்கினை விசாரித்த சிவகங்கை போக்சோ சிறப்பு நீதிமன்ற நீதிபதி கோகுல் முருகன் சிறுமிக்கு பாலியல் தொந்தரவு அளித்த கார்த்திக்கிற்கு 30 ஆண்டு சிறை தண்டனையும் 55 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.



தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் அருகே முப்பிலிவெட்டி கிராமத்தில் புதிதாக கட்டப்பட்ட உள்ள மினி ஜவுளி பூங்காவுக்கான அடிக்கல்லை கனிமொழி எம்.பி. நாட்டினார். அருகில் அமைச்சர் கீதாஜீவன், கலெக்டர் இளம்பகவத், கூடுதல் கலெக்டர் ஐஸ்வர்யா ஆகியோர் உள்ளனர்.



கார்த்திகை தீபம் திருவிழா நடைபெறுவதை ஒட்டி, சேலத்தில் ஆங்காங்கே சாலையோர கடைகளில்விளக்குகள்விற்பனைதீவிரமாகநடைபெற்றுவருகிறது.பக்தர்கள்ஆர்வத்துடன் வாங்கிய காட்சி.



மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே குறவன்குளத்தில் தோட்டங்களில் கம்பு பயிரிடப்பட்டுள்ளது. தற்போது மழை பெய்து வருவதால் செழித்து வளர்ந்துள்ளது.

# உதயேந்திரம் பேரூர் திமுக சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 49 வது பிறந்தநாள் விழா!



வாணியம்பாடி, நவ.30

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த உதயேந்திரம் பேரூர் திமுக சார்பில் துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 49 வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சிக்கு பேரூராட்சி மன்ற தலைவர் ஆ.பூசாராணி தலைமை வகித்தார். துணைத்தலைவர் கோவிந்த ராஜ், பொருளாளர் மீர் முகமது கனி, மாவட்ட பிரதிநிதிகள் அம்பலவாணன், எம்.எஸ்.மேகநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு துணைத் தலைவர் கோவி அசோகன் அனைவரையும் வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக பேரூர் திமுக செயலாளர் ஆ.செல்வராஜ் கலந்து கொண்டு துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு கேக் வெட்டியும், இனிப்பு வழங்கி கொண்டாடினார்.

நிகழ்ச்சியில் தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள் இசைகுமார், பாபு, செந்தில், கிளை செயலாளர்கள் சுகுகுமார்(4 வது வார்டு), ராஜ்குமார்(14 வது வார்டு), சிட்டி பாபு, மன்ற உறுப்பினர்கள், கட்சி நிர்வாகிகள், அலுவலக பணியாளர்கள் உட்பட பலர் கலந்துக் கொண்டனர். முடிவில் பேரூர் மாணவரணி அமைப்பாளர் திவாகர் நன்றி கூறினார்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா:

# வாணியம்பாடியில் மாற்றுத்திறனாளிகள் நலசேவை சங்கத்தினர் அன்னதானம்!



வாணியம்பாடி. 30

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி தாலுக்கா புதூர் பேருந்து நிலையம் காந்தி சிலை அருகில், தமிழக துணை முதலமைச்சரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு, வாணியம்பாடி மாற்றுத்திறனாளிகள் நல சேவை சங்கத்தினர் அன்னதானம் வழங்கினர். மாற்றுத் திறனாளிகள் நல சேவை சங்க மாநில தலைவர் ஸ்ரீகாந்த் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு, சிறப்பு அழைப்பாளராக வாணியம்பாடி நகர செயலாளர் வி.எஸ். சாரதி குமார் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கி சிறப்பித்தார்.

உடன் மாநிலத் துணைத் தலைவர் தென்னரசன், சங்க ஆலோசகர் ஆனந்தன், கௌரவ தலைவர் திருப்பதி, ஸ்ரீதர் மற்றும் சங்க நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் பொதுமக்கள் உட்பட பலரும் கொண்டனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா:

# உதயேந்திரம் பேரூர் திமுக 14 மற்றும் 15 வது வார்டு கிளைகள் சார்பில் கேக் வெட்டி கொண்டாடினர்!



வாணியம்பாடி, நவ.30

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த உதயேந்திரம் பேரூர் திமுக 14 மற்றும் 15 வது வார்டு கிளைகள் சார்பில் துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 49 வது பிறந்த நாள் விழா மேட்டுப்பாளையம் கூட்டுச் சாலையில் கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சிக்கு திமுக 14 வது வார்டு கிளைச் செயலாளர் ஏ.ராஜ்குமார் தலைமை வகித்தார். துணைத்

தலைவர் கோவிந்தராஜ், ராஜன், ராஜசேகர்,15 வது வார்டு கிளை செயலாளர் சிட்டி பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.வார்டு பிரதிநிதி அன்பு அனைவரையும் வரவேற்றார். இதில் சிறப்பு அழைப்பாளராக பேரூர் திமுக செயலாளர் ஆ. செல்வராஜ் கலந்து கொண்டு துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு கேக் வெட்டியும், இனிப்பு வழங்கி கொண்டாடினார்.

நிகழ்ச்சியில் பேரூர் திமுக பொருளாளர்மீர்முகமதுகனி,மாவட்டபிரதிநிதிகள் அம்பலவாணன், எம்.எஸ்.மேகநாதன், மாவட்டஆதிதிராவிடநலக்குழுதுணைத் தலைவர்அசோகன், 14 வது வார்டு கிளை துணைசெயலாளர்கமலக்கண்ணன், தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள் இசைகுமார், பாபு, மன்ற உறுப்பினர்கள், கட்சி நிர்வாகிகள்உட்படபலர்கலந்துக்கொண்டனர். முடிவில் பி.எல்.சி மாது நன்றி கூறினார்.




இந்திய அரசு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் மை பாரத் தருமபுரி மற்றும் தருமபுரி சக்திகைலாஷ் மகளிர் கல்லூரி இணைந்து சர்தார் வல்லபாய் படேல் அவர்களின் 150 வது பிறந்தநாளை கொண்டாடும் வகையில் விழிப்புணர்வு பேரணியை தருமபுரி மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் தொடங்கி ராமாக்காள் ஏரி வரை நடத்தினர். இந்த பேரணியை தருமபுரி மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பாலசுப்பிரமணியன் கொடியசைத்து தொடங்கி வைத்தனர். இதில் 500 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

### திருவெண்ணெய்நல்லூர் அருகே

# மாற்றுத்திறனாளி பெண்ணிடம் பாலியல் சீண்டல்!

விழுப்புரம் நவ.30

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் அருகே அமைந்துள்ள தொட்டி குடிசை கிராமத்தில் மாற்றுத்திறனாளி பெண் தனிமையில் வீட்டில் இருந்தபோது அதே ஊரை சேர்ந்த அல்லி முத்து என்பவர் அந்த மாற்றுத்திறனாளி பெண்ணிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டனர் தகவல் அறிந்த திருவெண்ணெய்நல்லூர் காவல் ஆய்வாளர் இன்ஸ்பெக்டர் அழகிரி அவர்கள் உடனடியாக அந்த நபர் மீது வழக்குப் பதிவு செய்து சிறையில்



அடைத்தார் அதன் பிறகு தன் சொந்த செலவில் அந்த மாற்றுத்திறனாளி பெண்ணுக்கு புதிய கழிப்பிடம் கட்டிக் கொடுத்து ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர் உடன் உதவி ஆய்வாளர் அன்பழகன் விஜயகுமார் சிறப்பு உதவி ஆய்வாளர் கமலக்கண்ணன் முனுசாமி தலைமை காவலர் மகா மாஸ் விஜயகுமார் ஆகியோர் உடன் இருந்தனர் இது அறிந்த பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் அழகிரி இன்ஸ்பெக்டர் அவர்களை பாராட்டி வருகின்றனர்



### புதுக்கோட்டை அருகே

# தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பில் மணமடையில் கிளை மாநாடு!

புதுக்கோட்டைநவ.30

புதுக்கோட்டை அருகே தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பில் ஒடப்பவிடுதிக்கு உட்பட்ட கிளை மாநாடு மணமடை யில் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி / உள்ள ஒடப்பவி டுதிக்கு உட்பட்ட மனமடையில் தமிழ்நாடு அறிவியல் இயக் கத்தின் சார்பில் கிளை மாநாடு நடைபெற்றது.

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டும் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் ஒடப்பவிடுதி கிளை மாநாட்டில் வைக்கப்பட்டது

இந்த மாநாட்டிற்கு கறம்பக்குடி அறிவியல் இயக்கத்தின் செயற்குழு உறுப்பினரும் தலைமை ஆசிரியருமான அப்பு தலச்செயலாளர் நானி வேலை அறிக்கையை முன் வைத் தார். கிளையின் புதிய தலைவராக சஞ்சீவ் , செயலாளராக யோ காஸ்ரீ பொருளாளராக ஸ்டீபன் ஆகியோர் தேர்ந்தெ டுக்கப்ப .ட்டனர். மாவட்ட துணைத் தலைவர் பிச்சைமுத்து நிறைவுரை ஆற்றினார். மாவட்ட இணைச் செயலாளர் சாமி கிரிஷ் நிகழ்வை ஒருங் கிணைத்தார். மாநாட்டில் பங்கேற்றவர்களை செயற்குழு உறுப்பினர்.. திவ்யா வரவேற்க ஆசிரியர் சௌந்தர்யா நன்றி கூறினார்.

நிகழ்வில் ஒடப்பவிடுதி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பயை உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்துதல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### இந்திய கிரிக்கெட்டின்

# அதிகாரப்பூர்வ நிற கூட்டாளியாக ஏசியன் பெயிண்ட்ஸ் பிசிசிஐ உடன் இணைகிறது!



சென்னைநவ.30

இந்தியாவின் முன்னணி பேயிண்ட் பிராண்டான ஏசியன் பெயி ண்ட்ஸ், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியமான BCCI உடன் 3 ஆண்டுகள் காலத்திற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்து செய்து, “இந்திய கிரிக்கெட்டின் அதிகாரப்பூர்வ நிற கூட்டாளராக” இணைந்துள்ளது. ஆண்கள், பெண்கள் மற்றும் உள்நாட்டு போட்டிகளை உள்ளடக்கிய 110க்கும் மேற்பட்ட போட்டிகளில் இந்த கூட்டணி செயல்படும். நிறங்களும் கிரிக்கெட்டும் பகிர்ந்து கொள்ளும் உற்சாகத்தை ஒன்றிணைக்கும் இந்த ஒப்பந்தம், ரசிகர்களிடையே மேலும் உயிரோட்டம் சேர்க்கும்எனநிறுவனம்தெரிவித்துள்ளது. இந்தஇணைப்பை பற்றி கருத்து தெரிவிக்கையில், ஏசியன் பெயிண்ட்ஸ் MD & CEO திரு. அமித் சிங்கிள், “கிரிக்கெட் ஒரு பில்லியன் இதயங்களைஒன்றிணைக்கும்விளையாட்டு. BCCIஉடன்இணைவது எங்களுக்கு பெருமை. நிறங்கள் மனிதர்களின் வாழ்க்கை மற்றும் உணர்வுகளை மாற்றும் சக்தி கொண்டவை; அந்த ஆற்றலை கிரிக்கெட்டின் உலகத்திற்குக் கொண்டு செல்ல நாங்கள் உற்சாகமாக இருக்கிறோம்,” என்றார்.

# பந்தன் மியூச்சுவல் ஃபண்ட் – தங்கம் மற்றும் வெள்ளி ETFகளை அறிமுகம்!



சென்னை, நவ.30

பந்தன் மியூச்சுவல் ஃபண்ட், பந்தன் தங்க ETF மற்றும் பந்தன் வெள்ளி ETF என இரண்டு புதிய ஓப்பன்எண்ட் நிதி திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த ETF கள் உள்நாட்டு தங்கம் மற்றும் வெள்ளியின் விலை மாற்றப் போக்கைப் பின்தொடரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. புதிய நிதி சந்தா (NFO) டிசம்பர் 1 முதல் 3 வரை திறந்திருக்கும். முதலீட்டாளர்கள் தங்களுக்கு விருப்பமான தளத்தின் மூலம் நேரடியாக முதலீடு செய்யலாம். வரலாற்று காலமாக தங்கமும் வெள்ளியும் முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பையும், நிலையான மதிப்பையும் வழங்கி வருகின்றன. உலகளாவிய நிச்சயமற்ற சூழலில் தங்கம் மீண்டும் ஒரு நம்பகமான மதிப்பு சேமிப்பாக திகழ்கிறது. முக்கிய தொழில்துறை உலோகமாகவும் உருவெடுத்து வருகிறது.



# தருமபுரி கிழக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

தருமபுரி நவ.30

தருமபுரி கிழக்கு மாவட்ட திமுக கட்சி அலுவலகத்தில் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ஆ. மணி M P அவர்களின் தலைமையில் ஒன்றிய ,நகர,பேரூர் ,கழக செயலாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் துணை முதலமைச்சரின் பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடப்படுவதை குறித்து நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டது .

இதில் தருமபுரி கிழக்கு மற்றும் மேற்கு நகர கழக பொறுப்பாளர்கள் நாட்டான் மாது, கௌதம், ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஏ எஸ் சண்முகம், D Lகாவேரி, பெரியண்ணன், செல்வராஜ், பச்சையப்பன், கிருஷ்ணன், முத்துசாமி, கந்தையன், ரத்தினவேல் ,சந்தோஷ், பேரூர் செயலாளர் பிரகாஷ், மாவட்ட துணை செயலாளர்கள் ஆறுமுகம், கிருஷ்ணகுமார், வாசு, இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் எம் ஜி எஸ் வெங்கடேஸ்வரன், துணை அமைப்பாளர் அசோக் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### காரிமங்கலம் அருகே

# மதுபோதையில் சித்திக்கு பாலியல் தொந்தரவு!

## மகனை அடித்து கொன்ற அப்பா, மகன் இருவர் கைது!!





காரிமங்கலம் நவ.30

தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் அடுத்த ஜொல்லம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சரவணன் (32) மது போதையில் ஆங்கங்கே சுற்றிக்கொண்டு பல்வேறு குற்ற சம்பவங்களில் ஈடுபட்ட வந்துள்ளார். புதன் கிழமை இரவு வீட்டின் அருகே சரவணன் ரத்த காயங்களுடன் மர்மமான முறையில் சடலமாக கிடந்துள்ளார்.

இதுகுறித்து காரிமங்கலம் காவல் துறையினர் சந்தேகத்தின் அடிப்படையில்தந்தைஜெயசங்கரிடம் விசாரணை நடத்தியுள்ளனர். அந்த விசாரணையில் முன்னுக்கு பின் முரணாக தெரிவித்துள்ளார். இதனால் காவல் துறையினருக்கு சந்தேகம் எழுந்துள்ளது. தொடர்ந்து நடத்திய விசாரணையில் தனக்கு இரண்டு மனைவி என்றும் மதுபோதையில் சரவணன் தனது இரண்டாவது மனைவியிடம் தகாத முறையில் நடந்து கொண்டு பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்து நானும், மகன் கோவிந்தராஜ் (இரண்டாவது மனைவி) இருவரும் சேர்ந்து சரவணனை செங்கலால் தலையில் அடித்ததில் படுகாயமடைந்து கீழே சரிந்து விழுந்தார். அப்பொழுது வெளியில் இழுத்து வந்து, ஜமக்காளம் போட்டு மூடிவிட்டதாக ஒப்புக் கொண்டுள்ளார். இதனை தொடர்ந்து சரவணன் தந்தை ஜெயசங்கர், கோவிந்தராஜ் இருவரையும் காரிமங்கலம் காவல் துறையினர் கைது செய்தனர்.

### போச்சம்பள்ளி அருகே

# அரசு பள்ளி வளாகத்தில் ஆபத்தான நிலையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி!

## சீர்செய்ய பெற்றோர்கள் கோரிக்கை!!



கிருஷ்ணகிரி நவ.30

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அருகே உள்ள ஆவத்துவாடி ஊராட்சியில் உள்ள சுண்டகாப்பட்டி கிராமத்தில் 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்த கிராமத்தில் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு, 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கபட்டு வருகிறது. இந்த நிலையில் கடந்த 201213 ஆம் ஆண்டு இது சரியான முறையில் புனரமைக்கப்படவில்லை என கூறப்படுகிறது.

இந்த நிலையில் தற்போது இந்தத் தொட்டி மீண்டும் மிகவும் மோசமான நிலையில் உள்ளது தொட்டியின் வெளிப்புறத்தில் சிமெண்ட் பூச்சுகள் (காரைக்கால்) ஆங்காங்கே பெயர்ந்து கீழே விழுகின்றன. தொட்டியின் பல இடங்களில் விரிசல்கள் ஏற்பட்டு, அதன் உறுதித்தன்மை கேள்விக்குறியாகியுள்ளது.இந்தமேல்நிலைநீர்த்தேக்கத் தொட்டியின் அருகிலேயே அரசு தொடக்கப் பள்ளி இயங்கி வருகிறது.

இந்தப் பள்ளியில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் படித்து வருகின்றனர். இந்த மாணவர்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தெட்டியின் கீழ் பகுதியில் உள்ள கழிவறைக்கு சென்று வருகின்றனர். சிமெண்ட் காரைக்கல் பெயர்ந்து அவ்வப்போது பெயர்ந்து கீழே விழுவதால் தங்கள் பிள்ளைகள் மீது விழுந்து விபத்து நடந்துவிடுமோ என்ற பயத்தில் பெற்றோர்கள் அச்சத்தில் உள்ளனர்.

மேலும் நீண்டகலமாக தெட்டியை சுத்தம் செய்யாமல் உள்ளதால் அந்த பகுதி மக்களுக்கு நோய் ஏற்படுவதாக குற்றம் சுமத்துகின்றனர்.

உடனடியாக பள்ளி அருகே உள்ள இந்த ஆபத்தான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை மாணவர்களின்பாதுகாப்பைக்கருத்தில்கொண்டு, இந்த பழுதடைந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் போர்க்கால அடிப்படையில் சீரமைக்கவோ அல்லது இடித்து அகற்றவோ உடனடியாக மாவட்ட நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகள், ஆய்வு செய்து நடவடிக்கை எடுத்து சீர் செய்ய வேண்டும் என்று அந்த பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



தென்காசி தெற்கு மாவட்ட திமுக மகளிர் தொண்டரணி சமூக வலைதள பொறுப்பாளர் ஷோபனா ராணி மூக்கன் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு அவரை சந்தித்து புத்தகம் வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் 49வது பிறந்தநாள் விழா:

## பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்தில் தொழு நோயாளிகளுக்கு உணவு, உடைகளை அமைச்சர் கோ.வி. செழியன் வழங்கினார்!



செங்கல்பட்டு, நவ. 30

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட வீராபுரம் ஊராட்சியில் அமைந்துள்ள அரசு மறுவாழ்வு இல்லத்தில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் 49வது பிறந்த நாளை முன்னிட்டு ஊராட்சி மன்ற தலைவர் டில்லி ஏற்பாட்டில், காட்டாங்குளத்தூர் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் தொழு நோயாளிகளுக்கு உணவு, உடைகள் வழங்கும் விழா நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக உயர் கல்வித்துறை அமைச்சர் கோ.வி.செழியன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், ஒன்றிய கழக செயலாளர் ஆப்பூர் பி.சந்தானம், ஆகியோர்கள் கலந்து கொண்டு அரசு மறுவாழ்வு இல்லத்தில் வசிப்பவர்களுக்கு உணவு, உடை, வழங்கினார்கள்.

இதில் ஒன்றிய கவுன்சிலர்கள், அருள் தேவி, ஜீவானந்தம், உட்பட வீராபுரம் ஊராட்சி திமுக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



நாகையில் நடந்த மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு ஊர்வலத்தை மாவட்ட கலெக்டர் ஆகாஷ் தொடங்கி வைத்தார். இதில் நிர்வாகப் பொறியாளர் பிரபாகரன், உதவி நிர்வாகப் பொறியாளர்கள் சண்முகநாதன், கண்ணதாசன், உதவி பொறியாளர்கள் பிரேம்குமார், ரஞ்சித்குமார், அக்ஷயா, அபிநயா மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## விழுப்புரம் நீதிமன்றம் – இஃபைலிங் ரத்து கோரி வழக்கறிஞர்கள் மனித சங்கிலி போராட்டம்



விழுப்புரம்,நவ.30


விழுப்புரம் நீதிமன்ற வளாகம் முன்பு நேற்று காலை நீதிமன்றங்களில் நடைமுறையில் உள்ள இஃபைலிங் (efiling) முறையை ரத்து செய்யக் கோரி, சுமார் 100க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் மனித சங்கிலி அமைத்து கண்டனத்தில் ஈடுபட்டனர்.

நீதிமன்றங்களில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் முழுமையாக ஏற்படுத்தப்படாமல், திடீரென இஃபைலிங் முறை கொண்டு வரப்பட்டுள்ளதாக அவர்கள் குற்றம் சாட்டினர். சீரான இணைய வசதி, போதிய கணினி வசதிகள், தொழில்நுட்ப உதவியாளர் உள்ளிட்ட வசதிகள் இல்லாத நிலையில், இந்த முறை வழக்குத் தொடரும் செயல்முறையை சிரமப்படுத்தி வருவதாக வழக்கறிஞர்கள் தெரிவித்தனர். உள்கட்டமைப்பு வசதிகளை முதலில் அமைத்து, அதன் பிறகே இஃபைலிங் முறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி, மாநில அரசு மற்றும் நீதித்துறை நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர் மாவட்ட முன்னோடி வங்கி சார்பில் RBI மூலம் வங்கியின் முயற்சியில் நீண்ட நாட்களாக உரிமை கோரப்படாத வைப்புத் தொகையினை (Claim) ஆகாத தொகையினை வாரிசுதாரர்களுக்கு திருப்பி வழங்கினார்கள் உடன் மாவட்ட வன அலுவலர்ரா .ராஜ்மோகன் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், ஆகியோர் உள்ளனர்.

## வைகைஅணை நீர்மட்டம் உயர்வு!



தேனி,நவ.30

பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால் வைகைஅணையின் நீர்மட்டம் மெதுவாக உயர்ந்து வருகிறது

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே உள்ள வைகை அணை மதுரை தேனி திண்டுக்கல் சிவகங்கை ராமநாதபுரம் ஆகிய ஐந்து தென் மாவட்டங்களில் பாசனத்திற்கும் குடிநீருக்கும் ஆதாரமாக விளங்கி வருகிறது. தற்போது வைகை அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் விட்டு விட்டு மழை பெய்து வருவதாலும் மூலவையாற்றில் நீர்வரத்து உள்ளது . மேலும் பெரியாறு அணையில் இருந்தும் வைகை அணைக்கு நீர்திறப்பு அதிகரித்துள்ளது. இதனால் வைகைஅணை நீர்மட்டம் மெதுவாக உயர்ந்து வருகிறது . 71 அடி உயரமுள்ள வைகை அணை நீர்மட்டம் தற்போது 62.50 அடியாக உள்ளது . கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு 61.50 அடியாக இருந்தது . மூன்று நாட்களில் ஒரு அடி வரை அணை நீர்மட்டம் மெதுவாக உயர்ந்துள்ளது . அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 1532 கனஅடியாகவும், பாசனம் மற்றும் குடிநீர் வெளியேற்றம் வினாடிக்கு 869 கனஅடியாகவும் அணையில் நீர்இருப்பு 4084 மில்லியன் கன அடியாகவும் உள்ளது . வைகை அணை நீர்மட்டம் மெதுவாக உயர்ந்து வருவதால் பாசன விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்

## ராஜபாளையத்தில்

## சாலையை கடக்க முயன்ற நபர் லாரி மோதி பலி!

ராஜபாளையம் நவ 30

ராஜபாளையம் வேட்டை பெருமாள் கோயில் அருகே தனது சகோதரியின் வீட்டில் தனது அம்மா ருக்மணி யுடன் தங்கி இருந்தவர் நரசிம்மன் (48) இந்நிலையில் உடல்நலக்குறைவு காரணமாக ராஜபாளையம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள தனது அம்மா ருக்மணிக்கு உதவியாக தனது சகோதிரி வரலட்சுமி யுடன் இருந்துள்ளார் இரவு 9 மணியளவில் மருத்துவமனைக்கு எதிரே உள்ள ஒரு திருமண மண்டபத்திற்கு சென்று சாப்பிட்டுவிட்டு திரும்பி மருத்துவமனைக்கு வர சாலையை கடக்க முயன்ற போது ராஜபாளையத்தில் இருந்து தென்காசி ரோட்டில் வந்த லாரி மோதி முன் சக்கரம் ஏறியதில் நரசிம்மன் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார் இதுகுறித்து தெற்கு போலீசார் வழக்கு பதிவு செய்து தர்மபுரி மாவட்டம்

பெரியதோப்பு கிராமத்தை சேர்ந்த லாரிடிரைவர் அய்யாக்கண்னுவை கைது செய்து மேலும் விசாரணை செய்து வருகின்றனர்.

## துணை முதல்வர் பிறந்தநாள்:

## பழனி அரசு மருத்துவமனையில் பிறந்த 6 குழந்தைகளுக்கு தங்க நாணயம்!

### செந்தில்குமார் எம்.எல்.ஏ. வழங்கினார்!!



பழனி,நவ.30

பழனியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு பழனி அரசு ஆஸ்பத்திரியில் பிறந்த 6 குழந்தைகளுக்கு தங்க நாணயம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தி.மு.க சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. விழாவை முன்னிட்டு பழனி அரசு ஆஸ்பத்திரியில் பிறந்த 6 குழந்தைகளுக்கு தங்க நாணயம்

பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில் குமார் அவர்களின் வழிகாட்டுதலின்படி வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அஸ்வின் பிரபாகரன்

பழனி நகர செயலாளர் வேலுமணி, பழனி நகர் மன்ற தலைவர் உமா மகேஸ்வரி நகர இளைஞரணி அமைப்பாளர் லோகநாதன்

மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமான கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து நகராட்சி நகர்ப்புற விடற்றோர் தங்கும் இல்லத்தில் இரவு உணவு பழனி இளைஞரணி சார்பில் வழங்கப்பட்டனர்



## வாணியம்பாடி கோட்டை மசூதியில் நிறுத்தி இருந்த இருசக்கர வாகனம் மர்ம நபர் திருட முயற்சி!

வாணியம்பாடி,நவ.30

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி கோட்டை பள்ளிவாசல் முன்பாக தொழு கைக்கு வரும் இஸ்லாமியர்கள் பள்ளிவாசல் முன்பாக தங்களுடைய இருசக்கர வாகனங்களை நிறுத்திவிட்டு பள்ளிவாசலுக்குள் செல்வது வழக்கம். இந்த நிலையில் தொழு கைக்கு வந்த நபர் ஒருவர் தன்னுடைய இருசக்கர வாகனத்தை பள்ளிவாசல் வெளியே நிறுத்திவிட்டு தொழுகைக்கு சென்றுள்ளார். தொழுகை முடிந்த பின்னர் இருசக்கர வாகனம் எடுக்க வந்த வாகனத்தின் உரிமையாளர் இருசக்கர வாகனம் திருட முயற்சித்திருப்பது தெரிய வந்து, உடனடியாக பள்ளி வாசல் சார்பில் அங்கே பொருத் தப்பட்டுள்ள சிசி டிவி பதிவு காட்சிகளை பார்த்துள்ளார். அதில் மர்ம நபர் ஒருவர் அக்கம் பக்கம் நோட்டமிட்டு பின்னர் இருசக்கர வாகனத்தின் மீது அமர்ந்து காலால் வாகனத்தின் ஹேண்டில் லாக் உடைக்கும் முயற்சி யில் ஈடுபட்டு இருப் பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். மேலும் மக்கள் நடமாட்டம் உள்ளதை அறிந்து இருசக்கர வாகனம் திருடி செல்வதை கைவிட்டு அங்கிருந்து கிளம்பிச் சென்றது தெரிய வந்தது.

இந்நிலையில் இருசக்கர வாகனம் திருட முயற்சித்த சிசி டிவி காட்சிகள் சமூக வலை தளங்களில் வைரலாக பரவி வருகிறது.



விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழையொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/தொழிலாளர் நலத்துறை இயக்குநர் எஸ்.ஏ.இராமன், , மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ப.சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் அரிதாஸ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஜெ.இ.பத்மஜா, திண்டிவனம் சார் ஆட்சியர் ஆகாஷ் உட்பட பலர் உள்ளனர்.

## நெல்லிக்குப்பம் நகராட்சியை மாற்றுத்திறனாளிகள் முற்றுகை!



கடலூர்,நவ.30

கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் நகராட்சியில் மாற்றுத்திறனாளிகள் திடீர் முற்றுகை போராட்டம் நடைபெற்றது

தமிழ்நாடு நகரப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதியின் படி மாற்றுத் திறனாளிகள் நியாயமான உறுப்பினர் ஆகலாம் என சட்ட விதிகள் உள்ளது

மாற்றுத்திறனாளிகள் நகர மன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டு பதவி பிரமாணம் நகராட்சி ஆணையர் கிருஷ்ணராஜன் செய்து வைத்தார் நெல்லிக்குப்பம்நகராட்சியில் அவசர நகர மன்ற கூட்டத்தில் நேற்று நடைபெற்றது அதில் நியமன நகர மன்ற உறுப்பினர் கலந்து கொண்டார்

அவரை நகர மன்ற தலைவர் ஜெயந்தி ராதாகிருஷ்ணன் வரவேற்று பேசினார் இந்த நிலையில் நியாயமான உறுப்பினர் வெளியூரை சேர்ந்தவர் உள்ளூர்மாற்றுத்திறனாளிகள் பல பேர் இருக்கும் பட்சத்தில் வெளியூரை சேர்ந்த மாற்றுத்திறனாளி எப்படி தேர்வு செய்தீர்கள் என கேட்டு நேற்று திடீர் என்று மாற்றுத்திறனாளிகள் 50க்கும் மேற்பட்டோர் ஒன்று கூடி நகராட்சி நுழைவாயிலில் முன் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர்

அலுவலகத்தில்நகராட்சி ஆணையர் கிருஷ்ணராஜன் இல்லை என்று தெரிந்து கொண்டனர் போராட்டக்காரர்கள் இது சம்பந்தமாக வேறு இடத்தில் சில நகராட்சி அதிகாரிகள் சந்தித்து பேசினார்கள்

நீங்கள் ஏற்கனவே மனுக்களாக கொடுத்துள்ளனர் அது சம்பந்தமாக நாங்கள் பேசி முடிவெடுப்போம் என கூறி விட்டனர்



## வாணியம்பாடியில் நகரமன்ற நியமன உறுப்பினராக ராகேஷ் பதவி ஏற்பு; நகர்மன்ற தலைவர் ஆணையை வழங்கினார்!

வாணியம்பாடி, நவ.30

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நகர மன்ற நியமன உறுப்பினர் ராஜேஷ் பதவி ஏற்பு விழா மன்ற அரங்கத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு நகரமன்ற தலைவர் உமா சிவாஜி கணேசன் தலைமை வகித்தார். ஆணையாளர் ரகுராமன், துணைத்தலைவர் கையாஸ் அஹமத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிர்வாக அலுவலர் ஜெய்பிரகாஷ் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கான தேர்ந்தெடுக்கப்பட்ட நியமன உறுப்பினர் ராகேஷ் பதவி ஏற்றுக்கொண்டார். அவருக்கு நகராட்சி ஆணையாளர் ரகுராமன் பதிவி பிரமாணம் செய்து வைத்து சால்வை அணிவித்து அவருக்கான இறக்கையில் அமர வைத்தார். நகரமன்ற தலைவர் அவருக்கு நியமன உறுப்பினருக்கான ஆணையை வழங்கினார்.

தொடர்ந்து நகர மன்ற தலைவர் உமா சிவாஜி கணேசன், 10 வது வார்டு உறுப்பினரும் திமுக நகர செயலாளருமான வி.எஸ்.சாரதி குமார், மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் அவருக்கு சால்வை அணிவித்து வரவேற்றனர். நியமன உறுப்பினராக பதவி ஏற்றுக்கொண்ட ராஜேஷ் நகராட்சி 36 வார்டுகளில் வசிக்கும் மாற்றுத்திறனாளிகளின் குரலை இனிவரும் மன்ற கூட்டங்களில் எடுத்து பேசுவார்.

கூட்டத்தில் நகரமன்ற உறுப்பினர்கள் வி.எஸ்.சாரதிகுமார், ஏ.நாசிர்கான், தவுலத் பாஷா, ரஜினிகாந்த், சாந்தி பாபு, பி.முஹம்மத் அனீஸ், ஷாயின் பேகம் சலீம், நுஸ்ரத்துண்ணிசா, எம்.பஷீர் அஹமத், ஆஷா பிரியா, சி.முஹம்மத் நோமான், ஏஜாஸ் அஹமத், கலீம் பாஷா, சித்ரா தென்னரசு, பத்மாவதி, மஹபூபுண்ணிசா, பல்கீஸ் சலீம் உட்பட மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர். முடிவில் நிர்வாக அலுவலர் ஜெயபிரகாஷ் நன்றி கூறினார்.

## கோனாமேடு பகுதியில் மதுபான கடை வேண்டுமென ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளிக்க வந்த மது பிரியர்கள்!



திருப்பத்தூர் நவ.30

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நகராட்சி கோனாமேடு பகுதியில் டாஸ்மாக் நிர்வாகம் சார்பில் புதிய மதுபான கடை நேற்று முன்தினம் திறக்கப்பட்டது.

இதற்கு பாமக, விசிக, நாம் தமிழர் கட்சி, உள்ளிட்ட கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தியது. இதன் காரணமாக நேற்று முதல் மதுபான கடை தற்காலிகமாக மூடப்பட்டது. இதனால் ஆவேசம் அடைந்த அப்பகுதியை சேர்ந்த மது பிரியர்கள் தங்கள் பகுதியில் மீண்டும் மதுபான கடை திறக்க வேண்டும் என திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வந்தனர். பின்னர் மாவட்ட கலெக்டர் சிவ சௌந்தரவல்லி இடம் மதுபான கடை வேண்டுமென்று மீண்டும் அஃதே பகுதியில் மதுபான கடை திறக்க வேண்டும் என மனு அளித்தனர்.

மனுவை பெற்றுக்கொண்ட கலெக்டர் உங்கள் கோரிக்கை மனு மீது உரிய விசாரணை மேற்கொண்டு விரைவில் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். பல இடங்களில் மதுபான கடைகள் வேண்டாம் என பல போராட்டங்கள் நடக்கும் வேலையில் தங்கள் பகுதிக்கு மதுபான கடை வேண்டுமென்று மதுபான பிரியர்கள் ஒன்று கூடி ஆட்சியர் அலுவலகத்திற்கு வந்த சம்பவம் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு காணப்பட்டது.



தர்மபுரியில்

## குடிநீர் வசதி கேட்டு சாலை மறியல்!

### பள்ளி, கல்லூரி மாணவர்கள் தவிப்பு!!

பென்னாகரம், நவ.30

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் வட்டம் கே. குள்ளாதிரம்பட்டி பகுதியில் கடந்த இரண்டு மாதங்களுக்கும் மேல் குடிநீர் பிரச்சினை காரணமாக சாலை மறியல் நூற்றுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் சாலை மறியல் ஏற்படுத்தினர்...

இதனால் காலை நேரத்தில் பள்ளி மற்றும் கல்லூரிக்கு செல்லும் மாணவர்கள் செல்ல முடியாமல் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகினர்.

இந்த சாலை மறியல் காரணமாக 1 மணி நேரத்திற்கும் மேலாக சாலையின் இரு புறங்களிலும் பள்ளி மற்றும் கல்லூரிக்கு செல்லக்கூடிய பேருந்துகள், அரசு மற்றும் தனியார் பேருந்துகள் அந்த வழியே செல்ல முடியாமல் தவிர்ப்பு.

இதனால்சாலையின்இருபுறங்களிலும் இரண்டு கிலோ மீட்டருக்கு மேல் வாகனங்கள்அணிவகுத்துஇருந்தன..இதனை அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பென்னாகரம் வட்டாட்சியர் சண்முகசுந்தரம். ஒகேனக்கல் காவல் ஆய்வாளர் முரளி சம்பவ இடத்திற்கு வந்து கிராம மக்களை சமாதானம் செய்து சாலை மறியலை தவித்தனர்.இதனால் அப்பகுதியில் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பரபரப்பு காணப்பட்டது.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா:

## மாவட்ட மாணவர் அணி நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாட்டம்!



வாணியம்பாடி நவ.30

தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்பிறந்தநாள்விழாமுல்லையில் நடைபெற்றது.

திருப்பத்தூர் மாவட்டம், மாணவரணி சார்பில், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தே. பிரபாகரன் ஏற்பாட்டில் எளியோர் எழுச்சி நாள் நிகழ்வாக, காலை சிற்றுண்டி கேக் இனிப்பு நோட்டுப் புத்தகங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதி ஆலங்காயம் ஒன்றியம் முல்லை கிராமத்தில் அமைந்துள்ளசோடீஸ் மாணவர் தங்கும் விடுதியில் உள்ள மாணவர்களுக்காக வழங்கப்பட்டது. உடன், ஆலங்காயம் மத்திய கழகப் பொறுப்பாளர் அன்பு, ஆலங்காயம் கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.தாமோதிரன், சதாசிவம் ஒன்றியக்குழு உறுப்பினர் திருப்பத்தூர் மாவட்ட துணை அமைப்பாளர்கள்

டி.சி கார்த்திக்,ஜே அம்சவேணி ஜெயக்குமார் முல்லைப் பகுதியினை சார்ந்த கடசிப்பிரமுகர்கள் உட் பட பலரும் கலந்து கொண்டனர்.



கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி ஊராட்சி ஒன்றியம் ஜமீன் ஊத்துக்குளி ஊராட்சியில் தோட்டக்கலைத்துறை சார்பில் பசுமை குடில் முறையில் வெள்ளரி சாகுபடி முறையினை மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



புதுக்கோட்டை அருகே ஆவுடையார்கோயில் அரசு மேல்நி லைப்பள்ளியில் பேரிடர் மேலாண்மை குறித்து விழிப்புண ர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியர் திருலோகசுந்தரி தலைமை தாங்கினார். இதில், சமூக ஆர்வலர் ராஜ்குமார் கலந்து கொண்டுதீ விபத்து, வெள்ளம், பூகம்பம், இடிமின்ன ல் போன்ற பேரிடர்களின் போது எவ்வாறு பாதுகாப்பாக இருப்பது, முதலுதவி செய்வது போன்றவை குறித்து எடுத்து கூறினார்.

தாராபுரம்

## தேன்மலர் பள்ளி 'இழுத்து மூடப்படும்' என்ற வதந்தி பரபரப்பு!

### பெற்றோர்கள் திரளாக கூடினர்!!

தாராபுரம்நவ.30

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் புதிய பேருந்து நிலையம் எதிரே செயல்பட்டு வரும் தேன்மலர் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் இன்று காலை இழுத்து மூடப்பட உள்ளது எனும் வதந்தி சமூக வலைதளங்களில் வேகமாக பரவியதை அடுத்து, பள்ளி வளாகம் முன்பு பரபரப்பு நிலவி வருகிறது.

காலை முதலே *Instagram*, *Facebook*, *WhatsApp* போன்ற தளங்களில் பள்ளி மூடப்படுவதாக கூறி வைரலாக



பரவிய வீடியோவை பார்த்த நூற்றுக்கணக்கான மாணவர்களின் பெற்றோர்கள் அச்சத்துடன் பள்ளி முன்பு திரண்டனர். இதையடுத்து சூழ்நிலை கூடிய பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், தாராபுரம் டிஎஸ்பி சுரேஷ்குமார் மற்றும் காவல் ஆய்வாளர் விஜயசாரதி ஆகியோர் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி நிலைமை சமாதானப்படுத்த முயற்சி செய்து வருகின்றனர்.

பள்ளி தாளாளரின் தண்டபாணி அண்ணன் மகனான, வழக்கறிஞர் முருகானந்தம் கொலை வழக்கில் நீதிமன்றத்தில் பள்ளி கட்டடத்தை சீல் வைப்பதற்கான உத்தரவு வந்ததாக வாட்ஸ் அப் மூலம் பரவிய தகவலே இந்த பரபரப்புக்குக் காரணம் என கூறப்படுகிறது.

காரிமங்கலம்

## கிழக்கு ஒன்றியம் சார்பில் துணை முதல்வர் பிறந்தநாள் கொண்டாட்டம்!

காரிமங்கலம்நவ.30

தருமபுரி மேற்கு மாவட்டம் காரிமங்கலம் கிழக்கு ஒன்றியம் பைசுஅள்ளி ஊராட்சி மாட்லாம்பட்டியில் தமிழ்நாடுதுணைமுதலமைச்சர்உதயநிதிஸ்டாலின்அவர்களின் பிறந்தநாள்விழாவை முன்னிட்டுதர்மபுரிமேற்கு மாவட்ட



செயலாளர் பழனியப்பன் தலைமையில் காரிமங்கலம் கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் GVK சரவணன் ஏற்பாட்டில் தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடைகள் வழங்கி இனிப்புகள் வழங்கி பொதுமக்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் காரிமங்கலம் முன்னாள் ஒன்றிய கழகச் செயலாளர் அடிலம் அன்பழகன் மற்றும் மாநில ,மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

வேவ்ஸ் ஃபிலிம் பஜார் 2025:

## இளம் இயக்குநர்களுக்கு சிறப்பான வாய்ப்புகள்!

சென்னை நவ.30



56வது கோவா சர்வதேச திரைப்பட விழாவைத் தொடர்ந்து நடைபெற்ற NFDC வேவ்ஸ் ஃபிலிம் பஜார் 2025 கடந்த 5 நாட்களாக கோவாவில் பயனுள்ள தொழில்முறை செயல்பாடுகளுடன் நிறைவு பெற்றது. இதில் இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், ஸ்டுடியோக்கள் மற்றும் சர்வதேச பிரதிநிதிகள் கலந்து, தெற்காசிய சினிமாவில் புதிய கூட்டாண்மைகள் மற்றும் திட்டங்களை முன்வைத்தனர். ஒரு *spokesperson* கூறினார்: "வேவ்ஸ் ஃபிலிம் பஜார் இளம் மற்றும் முன்னணி இயக்குநர்களுக்கு தங்கள் திறமையை வெளிப்படுத்தும் முக்கிய மேடையாகும். இந்த ஆண்டில் பல புதிய திட்டங்கள் சர்வதேச அங்கீகாரங்கள் பெற்றுள்ளன, இது தெற்காசிய சினிமாவின் வளர்ச்சியை வெளிப்படுத்துகிறது." விருதுகளில் கூட்டுத் தயாரிப்பு சந்தை டாப் வின்னர் $10,000 பரிசை கக்தெட் (இடியட்) படத்திற்கு வழங்கியது, $5,000 பரிசு உல்டா (மேடம்) படத்திற்கு வழங்கப்பட்டது. மேலும் சிம்ஹஸ்தா கும்ப, தி மேனேஜர், ஆழி மற்றும் உஸ்தாத் பன்டூ போன்ற படங்கள் வெற்றிபெற்று, மற்ற விருதுகளும் மற்றும் காஸ்டிங் ஆதரவும் வழங்கப்பட்டன, இளம் இயக்குநர்களுக்கு வலுவான ஆதரவை உறுதி செய்தது.

## Nothing நிறுவனம் Phone (3a) Liteஐ இந்தியாவில் அறிமுகம் செய்தது!

சென்னை , நவ.30

லண்டன் தலைமையிடமாக செயல்படும் Nothing நிறுவனம், இந்தியாவில் புதிய *Phone (3a) Lite* ஸ்மார்ட்போனை அறிமுகம் செய்தது. கருப்பு மற்றும் வெள்ளை நிறங்களுடன், புதிய நீல நிறம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த சாதனம் Nothing நிறுவனத்தின் தனித்துவமான டிரான்ஸ்பரன்ட் டிசைன், 6.77 அங்குல AMOLED display, 50 MP பிரதான கேமரா மற்றும் 5000 mAh பேட்டரி போன்ற பல முன்னணி அம்சங்களைக் கொண்டுள்ளது.



8 GB + 128 GB வேரியண்ட் விலை வங்கி சலுகைகளுடன் ₹19,999 ஆகும். விற்பனை டிசம்பர் 5, 2025 முதல் *Flipkart*, *Vijay Sales*, *Croma* மற்றும் முக்கிய சில்லறை நிலையங்களில் தொடங்குகிறது.

"*Phone (3a) Lite* எங்கள்தனித்துவமானடிரான்ஸ்பரன்ட் டிசைன் மற்றும் உயர் செயல்திறன் அம்சங்களை வாடிக்கையாளர்களுக்கு கொண்டுவருகிறது. இது உயர்தர கேமரா, நீடித்த பேட்டரி மற்றும் மென்மையான ஒழுங்கான செயல்திறன் மூலம் பயனர்களுக்கு சிறந்த அனுபவத்தை வழங்குகிறது."



காவேரிப்பட்டினத்தில்

## சக்தி நவீன தவிடு அரவை ஆலை!

### கேபி.முனுசாமி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!!

காவேரிப்பட்டினம்நவ.30

காவேரிப்பட்டினம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் திரு T.ரவிச்சந்திரன் தலைமையில் அரசம்பட்டி ஊராட்சி மஞ்சமேடு கிராமத்தில் சக்தி நவீன தவிடு அரவை ஆலை சக்தி மார்டன் ரைஸ் மில் சக்தி டிபார்ட்மெண்ட் ஸ்டோர் ஆகியவற்றை கழக துணை பொதுச் செயலாளரும் வேப்பனப்பள்ளி உறுப்பினருமான கேபி.முனுசாமி கலந்து கொண்டு திறந்து வைத்தார்

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் அசோக்குமார் ஒன்றிய கழக பொருளாளர் சுந்தரவடிவேலு மத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் சக்கரவர்த்தி மத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் நரேஷ்குமார் முன்னால் கூட்டுறவு சங்க தலைவர் பண்ணந்தூர் பழனிசாமி தொழிலதிபர் பழனி ஒன்றிய பொருளார் ராமு முன்னால் ஊராட்சி கழக செயலாளர் வேடியப்பன் முன்னால் ஊரட்சி மன்ற தலைவர்கள் இளங்கோ சிவலிங்கம் சக்திவேல் கழக பிரமுகர்கள் எம்சேன்ட் வேடியபன் பெரியசாமி குமரிநாதன் வீரப்பன் சிராஜ் மருத்துவர் ரித்திக்ரோஷன் ஜெய்ஹிந்த் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர் இறுதியில் உரிமையாளர் சக்திவேல் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.



சிவகாசி மாநகராட்சி 44 வது வார்டு பாரதி நகர் பகுதியில் சிவகாசி மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் நகர்ப்புற சுகாதார மையம் அமைத்து தர வலியுறுத்தி மாண்புமிகு அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களிடம் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாமன்ற உறுப்பினர் பைக் பாண்டியன் தங்கப்பாண்டி செல்வி சார்பில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது இதில் விடுதலை சிறுத்தைகள் கட்சி செய்தி தொடர்பு மையம் மாநிலச் செயலாளர் அகரன் தலைவரின் நேரடி உதவியாளர் அபிமன்யு நகர துணை அமைப்பாளர் அகஸ்டின் பிரபாகரன் உடன் இருந்தனர்.

புதுக்கோட்டை அருகே

## மகளிர் பள்ளியில் மாணவிகள் பாதுகாப்பு கல்வி தேர்வு குறித்து கலந்தாய்வு கூட்டம்!

புதுக்கோட்டைநவ.30

புதுக்கோட்டை மாவட்டம்ஆலங்குடி அருகே உள்ள கீரமங்க லம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி உள்ளது. இப்பள்ளியில் பயிலக்கூடிய மாணவிகளின் பாதுகாப்பு மற்றும் கல்வி தேர்வுகள் குறித்து பெற்றோர்களுடன் கலந்தாய்வு கூட்டம் பள்ளியில் நடைபெற்றது.

பள்ளியின் தலைமை ஆசிரியர் வள்ளி நாயகி தலைமையில் நடைபெற்றது. பேரூராட்சி தலைவர் சிவகுமார் மற்றும் பெற்றோர்ஆசிரியர்கழகதலைவர்,பள்ளி மேலாண்மை குழு த லைவர்,முன்னாள் பேரூராட்சி தலைவர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகபொருளாளர் ஆகியோர் முன்னிலையில் நடந்தது.

பள்ளியில் 1000க்கும் மேற்பட்ட மாணவிகள் பயின்று வருகி ன்றனர் பள்ளிக்கு வரக்கூடிய மாணவிகள் கீரமங்கலம் மற்றும் பல்வேறு பகுதிகளில் இருந்து பள்ளிக்கு வருகின்றனர். அப்போது இளைஞர்கள் மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களை மாணவிகளை கண்டதும் அச்சுறுத்தும் வகையி ல் ஓட்டி வருவதாக மாணவிகளின் பெற்றோர்கள் பள்ளி நிர்வாகத்திடம் புகார் தெரிவித்தனர்.

இதையடுத்து பேரூராட்சி தலைவர் மற்றும் பேரூராட்சி முன் னாள் தலைவர்களை வைத்து பள்ளியில் கலந்தாய்வு கூட்டம் நடத்தவேண்டும் என பெற்றோர்கள் ஆசிரியர்களிடம் தெரிவித்தனர் இதையடுத்து பேரூராட்சி தலைவர்களுக்கு தகவல் தெரிவித்தனர் . இதையடுத்து அனைத்து மாணவர்களின் பெற்றோர்கள் முன்னிலையில் மற்றும் தலைவர்களை வைத்து பள்ளியில் கலந்தாய்வு கூட்டம் நடந்தது



கூட்டத்தில் இந்த ஆண்டு மாணவ மாணவிகள் கல்வியில் நன்கு தேர்ச்சி அடைய வேண்டும் மாவட்ட அளவில் முதலிடம் பெற வேண்டும் மருத்துவ மாணவர்களை அதிகமாக ஊக்கி வித்து படிக்க வைக்க வேண்டும் மேலும் இப்பொகுதியில் மாணவிகள் வரும்போது பாதுகாப்பு குறித்து கலந்தாய்வு வழங்கப்பட்டது . அப்போது பெற்றோர்களின் கோரிக்கையை ஏற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கலந்தாய் கூட்ட த்தில் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில் பேரூராட்சி தலைவர் , பெற்றோர் ஆசிரியர் கழக பொருளாளர், பள்ளி மேலாண்மை குழு தலைவர் மற்றும் உறுப்பினர் மற்றும் தலைமை ஆசிரியர், ஆசிரியை பெருமக்கள், பெற்றோர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் அக்க ச்சிப்பட்டி நடுநிலைப் பள்ளியில் இந்திய அரசியலமைப்பு தினத்தை முன்னிட்டு மாணவ மாணவிகள் முகவுரையை எழுதி வாசித்தனர். இந்நிகழ்விற்கு தலைமை ஆசிரியர் தமிழ்செல்வி தலைமை வகித்தார். கணித பட்டதாரி ஆசிரியர் மணிமேகலை அனை வரையும் வரவேற்றார். தமிழ்நாடு அறிவியல் இயக்க கந்த ர்வ கோட்டை ஒன்றிய செயலாளரும், அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ரகமதுல்லா இந்திய அரசியல் அமைப்பின் முக்கி யத்துவம் குறித்து பேசினார்.